Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# Womanism in Periyapuranam

**Dr. D. Nithya,** Assistant Professor of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-3160-9825
**DOI: 10.5281/zenodo.11192002**

## Abstract

*Literature illuminates the human experience, portraying life in various forms. It plays a significant role in shaping societal structures by depicting life's complexities during that era. The belief in God is paramount to the genesis of Bhakthi literature. Saiva religion is very ancient and have glimpses about the state of women. Lord Shiva is worshipped as the supreme deity of this religion. Thiruthonda Purana is a Purana composed by Sekizhar in an incomparably high style without any sophistication, compiling the histories of the Sivanadiyars who worshipped the Lord and received attainment (Mukthi) from Him. It explains the life of the devotees of Lord Shiva and their devotion, whose aim is to uphold the Shiva at all times. Before devotion, the devotees did not recognize the insignificance of worldly possessions. After getting the divine aid, Saivite devotees fostered devotion. "Periyapuranam" recounts the lives of 63 Nayanmars, emphasizing the status of women in their lives. Women's status as mothers, wives and daughters can be seen in many narratives. This paper examines the women who supported the devotees and their faith in Shivaneedhi which made their life to do charity to Shiva.*

**Keywords:** Literature, *Periyapuranam*, State of Women.

## References

[1] Natarajan, P. Ra. Poet. *Periyapuranam* (Source and Text) Volume 1 - 4. Uma Publishing House, Chennai -1, First Edition - December - 2005.
[2] Gnanasambathan, A. S. *Periyapuranam Oor Aaivu*. Sekizhar Research Centre, Chennai-17, First Edition – March-1994.
[3] Arunachalam, Pa. *Bhakthi Ilakiyam*. Mullai Nilayam, Chennai -17, First Edition - 2002.
[4] Arunachalam, Pa. *Saiva Samayam Oor Arimugam*. Mullai Nilayam, Chennai - 17, First Edition-2002.
[5] Rajamanik. *Periyapuranam Aaraichi*. Palaniappa Brothers Chennai - 14, First Edition - 1948.
[6] Kailasapati. Ancient Tamil Life and Worship. Bari Station, Chennai, First Edition -1966.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# பெரியபுராணத்தில் பெண்மை

**முனைவர் து. நித்யா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி கோவை, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0009-0005-3160-9825**

**DOI: 10.5281/zenodo.11192002**

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்கள் மனித வாழ்வினை வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன. அவை வாழ்வியல் நெறிகளை அவ்வகாலத்திற்கு ஏற்றவகையில் வெளிப்படுத்தி சமூக அமைப்பினை உருவாக்கும் பணியில் முக்கிய பங்குபெறுகின்றன. பக்தி இலக்கியம் என்ற இலக்கிய வகை உருவாவதற்கு மனிதனுக்கு கடவுள்மீது ஏற்பட்ட நம்பிக்கையே முதன்மை காரணம். பக்தியின் முன் உலகப் பொருள்கள் எவையும் சிறப்புடையன அல்ல என அடியார்கள் உணர்த்துகின்றனர். சைவ அடியார்கள் பலரும் பக்தியை வளர்த்தனர். நாயன்மார்களின் வாழ்வியல் முறைகளை எடுத்துக் கூறி மக்கள் மனதில் நிலையான இடத்தை பெற்றநூல் பெரியபுராணம். நாயன்மார்களின் வாழ்வில் ஒன்றிய பெண்களின் நிலையை எடுத்து கூறுவதே இவ்வாய்வின் நோக்கம். தமக்கையாக, மகளாக, தாயாக, மனைவியாக பல பரிமாணங்களில் பெண்களின் நிலை ஆராய்ந்து பார்க்கலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** இலக்கியங்கள், *பெரியபுராணம்*, பெண்களின் நிலை.

**முன்னுரை**

சைவ சமயம் தொன்மையானது. இச்சமயத்தின் முழு முதல் கடவுளாகப் போற்றப்படுபவர் சிவபெருமான். இறைவனை வழிபட்டு அவன் திருவருள் பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளைத் தொகுத்து உயர்வுநவிற்சியின்றி இணையற்ற உயர்ந்த நடையில் சேக்கிழார் இயற்றிய புராணமே திருத்தொண்டர் புராணம். சிவநெறியைக் காத்தல் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்ட அடியார்களின் வாழ்வையும் அவர்களின் மனநிலையும் செயல்களையும் தெளிவுபடக் கூறியுள்ளது. சிவத்தொண்டு புரிவதையே தன்வாழ்வாக கொண்டுள்ள சிவனடியார்களைப் பற்றியும், அவர்களுக்கு துணையாக இருந்த பெண்களின் நிலை பற்றியும் அவர்களின் மனநிலை பற்றியும் ஆராய்ந்து பார்க்கலாம்.

**பெரியபுராணத்தில் பெண்கள்**

பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களில் மூவர் பெண்கள். மங்கையர்கரசியார், காரைக்கால் அம்மையார், இசைஞானியார். மற்ற நாயன்மார்களின் மனைவியாக, தமக்கையாக, மகளாக பெண்பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. நாயன்மார்களின் பக்தி திறத்திற்கு ஏற்றவகையில் அவர்களுக்கு உறுதுணையாக நின்று உள்ளனர்.

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**மங்கையர்க்கரசியார்**

நின்ற சீர்நெடுமாறன் என்ற பாண்டிய மன்னனின் மனைவி மங்கையர்க்கரசியார். மதுரையை திறம்பட ஆட்சிப் புரிந்தவர். சமணசமயத்தைச் சார்ந்தவர். இறைவன் சூலைநோய் கொடுத்து திருநீற்றினால் உய்வுபெறச்செய்தார். சமண சமயத்தின் உண்மை நெருப்பில் சாம்பலாவது கண்டும் நீரில் நிலையாது கடலை நாடிசென்றது கண்டும் தெளிவடைந்து சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து எல்லாபொருளும் சிவமே என அறிந்து திருநீற்றின் நெறியை எங்கும் விளங்கிட சிவபதம் அடைந்தார். **வளவர் பிரான் திருமகளார் மங்கையருக்கரசியார் (நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம், பா. 8)** திருநீற்றில் அளவிறந்த அன்புடையவர். தன்கணவர் சமணசமயம் சார்ந்தது எண்ணி மிகவும் வருந்தினார். திருஞானசம்பந்தரை வரவழைத்து பாண்டியநாடு எங்கும் திருநீற்றில் ஒளி விளங்கச் செய்தார். தன்கணவருக்கு சைவசமயத்தின் உண்மையை உணர்த்தி நெடுங்காலம் சிவத்தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தார். மங்கையர்க்கரசியார் உறுதியாக நின்று தன்கணவரை சைவசமயத்தின் பெருமைகளை உணரச்செய்து நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படுகிறார்.

**காரைக்கால் அம்மையார்**

தனதத்தர் மகளாக புனிதவதியார் பிறந்து சிவத்தொண்டில் சிறந்துவிளங்கினார். இவரை பரமதத்தனுக்கு திருமணம் செய்தனர். இல்லறத்திலும், சிவத்தொண்டிலும் சிறப்புற விளங்கினார். அச்சமயம், பரமதத்தன் தன்னிடம் வாணிபம் செய்பவர் கொடுத்த மாங்கனி இரண்டையும் ஏவலர் மூலம் புனிதவதியிடம் கொடுத்தார். அந்நேரத்தில் சிவனடியார் ஒருவர் பசித்துவர சமையல் தயாராகாதநிலையில் ஒரு மாங்கனியை சிவனடியாருக்கு கொடுத்து பசியாற செய்தார். பின்னர் பரமதத்தன் மதிய உணவு உண்பதற்காக வர புனிதபதியார் அமுது பரிமாறினார். மாங்கனியில் மீதமுள்ள ஒன்றை பரமதத்தனுக்கு படைத்தார். அதனை உண்ட பரமதத்தன் சுவையின் காரணமாக மற்றொன்றையும் எடுத்துவர கூறினார். செய்வதறியாமல் புனிதவதியார் சிவனிடம் வேண்டிட அவர்கையில், மாங்கனி ஒன்று வந்தது. உடனே மகிழ்ந்து கணவருக்கு படைத்துவிட்டார். இதனை உண்ட பரமதத்தன் முன்பு கொடுத்த பழத்தைக் காட்டிலும் சுவைமிகுதி காரணமாக வினவ, நடந்ததை அம்மையார் கூறினார்.

**தேன் உடைய சடைப் பெருமான் திருவருளேல் இன்னும்ஓர்**
**ஆகில் இல்கனி அவன் அருளால் அழைத்து அளிப்பாய்**

**(காரைக்கால் அம்மையார் புராணம், பா. 29)**

என மொழிந்தனன் வியந்து கூறியது உண்மை எனில் மற்றொரு கனிவரச் செய் என்றான். அதன்படி புனிதவதியார்,

‘ஈசனே கனி அளித்து அருள் செய்யீராயின் என்சொல் பொய்யாகும்’ என்று வேண்ட மற்றொரு கனி கிடைத்தது. இதனைக் கண்டு பரமதத்தன் அதிசயம் கொண்டு தெய்வநலம் பொருந்திய பெண்ணாக கருதி வணிகத்தினால் செல்வம் சேர்க்க வேற்றுநாடு சென்று மற்றொரு திருமணம் செய்து தன்குழந்தைக்கு புனிதவதி என பெயரிட்டார். பரமதத்தன்

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

செல்வத்தோடு வருவான் என்ற நம்பிக்கையில் சிவத்தொண்டு செய்து சிவனை வழிபட்டு வந்த புனிதவதியார், பரமத்தத்தன் இரண்டாவது மனைவியும் மகளும் ஆகவந்ததை பார்த்தவுடன் மனமுடைந்த அம்மையார் அழகிய உருவம் வேண்டாம் என்று பேய் உருவம் கொண்டு சிவனை வழிபட்டு திருவலங்காட்டில் திருநடனம் கண்டு மூத்ததிருப்பதிகங்கள் இரண்டு பாடினார். அம்மையே என்று இறைவனால் அழைக்கப்பட்டவர். இரட்டைமணிமாலை, அற்புதத்திருஅந்தாதி பாடியுள்ளார். இவ்வாறு சிவத்தொண்டு புரிவதில் உண்மைநிலை புலப்பட வாழ்ந்தவர். இல்லறத்திலும் மேன்மைநிலை அடைந்தவர். கணவன் கேட்க இல்லை என்றுகூறாமல் எதையும் செய்யவேண்டும் என்ற நிலையும், கனி எவ்வாறு கிடைத்தது என்று வினாவ, கணவன் மனம் தெளிவடைய வேண்டும் என்பதற்காக வேதிருவருள்நிலையை கூறும் நிலையையும், அம்மையாரின் இல்லற சிறப்பையும் எடுத்துரைக்கிறது. ‘மீண்டும் கனியைத் தருவித்துக்கொடு’ என கணவன் கேட்க, ‘இறைவனே திருவருள் பொய்யாகும் கனியை தாரும்’, என்று இறைவனிடம் வேண்டி செய்து அம்மையாரின் இறைபக்தியை மேம்படுத்தி உள்ளது.

**இசைஞானியார்**

சமயக்குரவர் நால்வர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை பெற்றெடுத்தவர். திருஞானசம்பந்தரின் பெற்றோரும், திருநாவுக்கரசரின் பெற்றோரும் நாயன்மார்களுள் ஒருவராக இடம்பெறவில்லை. ஏனெனில் அரண்வழிபாட்டிலும் அடியார் வழிபாடு சிறந்தது என்ற வண்ணம் திருத்தொண்டர்களை வணங்கி, திருத்தொண்டத்தொகைப் பாடிய சுந்தரரின் பெற்றோர் நாயன்மார்களுள் ஒருவராக திகழ்கின்றார். **ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையர்** ( **இசை ஞானியார் புராணம்**, **பா. 1**) என சேக்கிழார் புகழ்கின்றார். சடையனாரும், இசைஞானியாரும் சிவபெருமானை இடையறாது வணங்கி வாழ்த்தி பூசித்து சிவபாதம் அடைந்தார்கள்.

**திருநாவுக்கரசரும் திலகவதியாரும்**

திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள்நீக்கியார். திருவாமூரை சேர்ந்தவர். திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார். இவர்

**குன்றை அடிபணிந்து கோது இல் சிவசின்னம்**
**அன்று முதல் தாங்கி ஆர்வம் உறத்தம் கையால்**
**துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார் (திருநாவுக்கரசர் புராணம், பா. 43)**

திருவதிகை வீரட்டானம் என்ற திருத்தலத்தில் சிவச்சின்னங்கள் புனைந்து திருத்தொண்டு புரிந்து வாழ்ந்து வந்தார் திலகவதியார். திருநாவுக்கரசர், சோலைகள் அமைத்தல், குழம்புவெட்டுதல், தண்ணீர் பந்தல் அமைத்தல் என பணிகளைச் செய்து சமண சமயத்தைச் சார்ந்து இருந்தார். இதைக் கண்டு தமக்கையார் மிகவும் வருந்தினார். ஆனால் இறைவன் அவரை சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டார். இந்நோயை தீர்க்க முடியாமல் சமணர்கள் வருந்தினர். பின்னர் கைவிட்டனர். ஆதலால், திருநாவுக்கரசர் தமக்கையார் இருக்கும் இடத்தை அடைந்தார். திலகவதியார் ஐந்தெழுத்தை ஓதி திருநீற்றை அளித்தார்.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

சூலைநோய் நீங்கியது. மெய்பொருளை உணர்ந்து திருநீற்றையும், கண்டிகையையும் புனைந்து ஐந்தெழுத்தை நினைத்து தமிழ்பதிகம் பாடி உழவாரப்படைக் கொண்டு திருத்தொண்டு புரிந்தார். திருநாவுக்கரசருக்கு அவருடைய சகோதரி திலகவதியார் உற்ற துணையாக இருந்து நல்வழிப்படுத்தியுள்ளார். சமண சமயத்தை சார்ந்தவர்கள் கைவிட்ட போதிலும் திலகவதியார் காப்பாற்றி சூலைநோயை திருநீற்றினால் தீர்த்தருளியுள்ளார்.

**மான கஞ்சாறரும் மகளின் திருமணமும்**

மானகஞ்சாறர் அடியவர்களுக்கு சதா ஏவல்புரியும் தொழிலை செய்பவர். திருத்தொண்டர்கள் குறிப்பறிந்து கொடுத்து உதவுவார். மானகஞ்சாறர் சிவனடியார்களைக் கண்ட போதே வணங்கும் நல் இயல்பினார். தொண்டர்களுக்கே தொண்டாற்றி வருகின்ற அடிமை திறத்தை மேற்கொண்டவர். தன் மனைவியுடன் இல்லற வாழ்வில் சிறந்து விளங்கினார். குலம் தழைக்க ஈசனாரிடம் வேண்டி ஒரு மகளைப் பெற்று எடுத்தனர். அன்புடனும், பாசத்துடனும் சிறப்பாக வாழ்ந்தனர். மகள் திருமணப் பருவம் எய்தினாள்.ஏயர்கோன் கலிக்காமர் என்பவருக்கு மணம் பேசினர். திருமண நாளன்று, நெற்றியில் திருநீறும், சிகையில் என்பு மணிகளும், காதில் குண்டலமும், மார்பில் தாழ்விடமும், தோளில் பூணூல், கையில் திருநீற்றுப் பையும் கொண்டு,

**பொடிமூடு தழல் அன்னத் திருமேனி தனில் பொலிந்த**
**பழநீரு திருநீற்றின் பரப்பு அணிந்த பான்மையராய் (மான கஞ்சாற நாயனார் புராணம், பா. 25)**

என மாவிரத தவவேடம் தாங்கி ஈசனார், மானக்கஞ்சாறர் இல்லத்தை அடைந்தார். சிவனடியாரைக் கண்டு மகிழ்ந்து நாயனார் உள்ளே அழைத்துச் சென்றார். திருமணத்திற்கு தயாராக மணக்கோலம் பூண்ட தன் மகளை அடியார்களிடம் அருள் பெற சொன்னார். அதன்படி திருவடி வீழ்ந்து வணங்கிய அப்பெண்ணின் கருங் கூந்தலை கண்டு, இக்கூந்தல் பூணூல் ஆகிய பஞ்சவடிக்கு உரியதாகும் எனக் கூற உடனே கூந்தலை அரிந்து, மாவிரதரது கையினில் கொடுத்தார். வாங்குவார் போல நின்ற அடியார் மறைந்து இடவ வாகனத்தில் காட்சியளித்தார். இதனை அறிந்த ஏயர்கோன் கலிக்காமர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து அப்பெண்ணை மணம் செய்து கொண்டார். திருவருளால் கூந்தல் பன்மடங்கு வளர்ந்தது. யாவரும் பெருமங்கலம் எய்தினர். தன் ஒரே ஒரு மகளின் கூந்தலை அவள் திருமண நாள் அன்று சிவனடியாருக்காக அறிந்துகொடுத்தார் மான கஞ்சாற நாயனார்.

**நாயன்மார்களின் பக்தியும் மனைவிமார்களும்**

**திருநீலநக்கர்** சோழ நாட்டை சேர்ந்தவர். மனைவியுடன் சேர்ந்து வழிபாடு நடத்துபவர். வேத ஆகமங்களால் ஆராய்ந்து துணிந்த மெய்ப்பொருள் திருநீற்றே என்று உணர்ந்தவர். இந்நிலையில் திருவைந்தழுத்தை ஓதி, தியானம் செய்யும் போது சிவலிங்கத்தின் மேல் சிலந்தி விழ அதை அம்மையார் வாயால் ஊதினார்.

**ஒழிந்து நீங்கிட ஊதி முன் துமிப்பவர் போலப்**

**பொழிந்த அன்பினால் ஊதி மேல் துமிந்தனர்… (திருநீல நக்கர் நாயனார் புராணம், பா. 12)**

என வாயினால் ஊதிய செயலை குற்றம் என நினைத்து மனைவியை ஒதுக்கினார். பின் இறையருளால் மனைவியை ஏற்றுக்கொண்டு சிறப்புடன் வழிபாடு செய்து சிவஜோதியில் கலந்தார்.

**கழற்சிங்கர்** வட புல மன்னரை வென்று நவநிதிகளைக் கொணர்ந்தார். பல ஆலயங்கள் தோறும் சென்று வழிபடுவார். ஒரு சமயம் திருவாரூரை அடைந்து இறைவனை கண்ணீர் மல்கி, கைகூப்பி உள்ளம் உருகி தரிசித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் பட்டத்து அரசி கோவிலை வலம் வந்து பூ தொடுக்கும் மண்டபத்திற்குள் நுழைந்து ஒரு புதிய பூவினை எடுத்து முகர்ந்தார். அதைக் கண்ட செறுத்துணையார்,

**முடியில் ஏறுந் திருப்பூமண்டபத்து மலர்மோந் திடும் மூக்கைத் தடிவன் என்று**
**கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித் தொண்டர் (செருத்துணையார் புராணம், பா. 5)**

என்ற வண்ணம், சிவபெருமானின் பூவை மோந்து பார்ப்பது சிவ துரோகம் என்று எண்ணி அரசியார் மூக்கை அறுத்தார். இதைக்கண்ட கழற்சிங்கர் பூவை மோந்த மூக்கை விட பூவை எடுத்த கையை தண்டிக்க வேண்டும் என்று கூறி,

**பட்டமும் அணிந்து காதல் பயில் பெருந் தேவியான**
**மட்ட வீழ் குழலாள் செங்கை வளையொடுந் துணிந்தார் அன்றே (கழற்சிங்க நாயனார் புராணம், பா. 10)**

என அரசியாரின் கரமலரை வடிவாளால் வெட்டினார். இவ்வாறு செருத்துணையாரும் கழற்சிங்கரும் சிவபெருமானின் பூஜை கூறிய மலரை முகர்ந்த காரணத்தினால் ஒரு பெண்ணின், பட்டத்து அரிசியின் மூக்கையும் கையையும் தண்டித்து தன் பக்தி நிலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

**இயற்பகை நாயனார்** வணிகர் குலத்தை சேர்ந்தவர். அடியார்களின் மனம் அறிந்து இல்லை என்னாது எதையும் செய்பவர்.

**செக்கர் வெண்பிறை சடையர் அடிமைத்**
**திறத்தின் மிக்க மறைச்சிலம்பு அடியார் (இயற்பகை நாயனார் புராணம், பா. 2)**

என பிறை சூடிய சிவபெருமான் திருவடியையே நினைத்து அடிமைத்திறம் பூண்டு அருள் நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்.

**நீறுசேர் திருமேனியர் மனத்து**
**நிலைத்த யாவையும் வினைப் பட முடித்து (இயற்பகை நாயனார் புராணம், பா. 3)**

என்று அடியவர்களின் மனம் அறிந்து யாவையும் செய்பவர். சிவபெருமான், திருமேனி நிறைய திருவெண்ணீறு புனைந்து தூர்த்த வேடம் கொண்டு வேதியராய் காவேரி பூம்பட்டினம் வந்தார். பின்னர் இயற்பகையாரிடம், **மன்னுங் காதல் உன் மனைவியை வேண்டி (இயற்பகை நாயனார் புராணம், பா. 7)** என்ற உடன் இயற்பகையாரும் சிவனடியாரை வணங்கி அதற்கு இசைந்தார்.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

கற்புடை இயற்பகையார் மனைவியும், கணவன் கட்டளை இதுவே எனில் அதை செய்வோம் என்று அவரும் சிவனடியாருடன் செல்வதற்கு இசைந்தார். ஆனால் இயற்பகையாரின் சுற்றமும்,அம்மையாரின் சுற்றமும் எதிர்த்து வர,

**இயற்பகை பித்தன் ஆனால்**

**புனை இழை தன்னைக் கொண்டு (இயற்பகை நாயனார் புராணம், பா. 13)**

என இயற்பகையார் பித்தன் என்று கூறி அம்மையாரை மீட்க வந்தனர். ஆனால் இயற்பகையார் எதிர்த்து வந்த அனைவரையும் கொன்று வீழ்த்தினார். திருசாய்க்காடு அருகே சென்று சிவனடியாரையும் மனைவியாரையும் விட்டு திரும்பினார். அப்போது இறைவன் அவருக்கு காட்சி தந்து அவரின் பக்தித்திறனை உலகறிய செய்தார். இவ்வாறு திருமேனியில் திருநீறு அணிந்த தூர்த்த வேடமாக இருப்பினும் அவரின் தேவையை நிறைவேற்றியுள்ளார். தன் மனைவியை கேட்ட பின்னும் சிறிதும் தயங்காமல் சிவனடியாருக்கு தந்தருளினார்.ஏனெனில் சிவனே எல்லாம் ஆக இருப்பவன் என்பதை உணர்ந்து தன் உயிர் உடம்பு அனைத்தும் சிவனடியாருக்கே என்ற எண்ணம் கொண்டு வாழ்ந்தவர். தூய்மையான திருநீறு மேனியில் இருந்தாலும் கெட்ட எண்ணம் உடையவர் என்பதை உணர்ந்தாலும் அவர் சிவனடியார் என்பதை தவிர வேறு சிந்தனை இல்லை. இத்தகைய இயற்பகையாரின் மன உறுதியும் பக்தி திறனும் போற்றுவதற்குரியது.

**இளையான்குடி மாற நாயனார்** வேளாளர் குடியில் பிறந்தவர். சிவனடியார்களுக்கு அமுது செய்து தருவார் வறுமை காலத்திலும் திருத்தொண்டு புரிவதில் வல்லவர். சிவபெருமானின் அடிமை திறத்திலே உயர்ந்து விளங்கும் பெருமையின் மேன்மையைத் தம்முடையதாகக் கொண்டு வாழ்பவர். செல்வம் இருந்த போதும் வறுமை உற்றபோதும் சிவனடியார்களின் பசிதீர்த்து சிவத்தொண்டில் உயர்ந்த நிலை உற்றவர். சிவபெருமான் நல்ல தவவேடம் பூண்டு, நீரும், கண்டிகையும் புனைந்து இளையான்குடி மாற நாயனாரிடம் வந்தார். மாறனார் தனக்கு உணவு இல்லாமல் தவித்த அந்த நிலையிலும் சிவனடியாரை வரவேற்று தன் வயலில் இருந்த விதை நெல்லை எடுத்து வந்து உணவாக்கி சிவனடியாரின் பசியை போக்கினார். **அன்பனே அன்பர் பூசை அளித்து நீ அணங்கினோடும் (இளையான்குடி மாற நாயனார் புராணம், பா.** 7) என்று சிவனடியார் உமையம்மையோடு காட்சியளித்து, 'அன்பனே! அடியாருக்கு அமுது அளிக்கும் பூஜையினைச் சிறிதும் வழுவுறாமல் காத்து பேணி வந்தமையால் நண்ணி பேருலகம் சிறந்து வாழ்வாயாக' என்று கூறினார். இவ்வாறு வறுமை நிலையிலும் வந்த சிவனடியாரின் பசியை போக்க இளையான்குடி மாற நாயனார் செய்த செயல் போற்றுவதற்குரியது.

**கலிக்கம்ப நாயனார்** வணிகர் குலத்தை சேர்ந்தவர். நெய், பால், தேன் என்று இவைகளால் செய்த உணவினை அடியார்களுக்கு தருவிப்பார். சிவனடியார்கள் விரும்புகின்ற பொருளைத் தந்து தொண்டு புரிந்து வாழ்ந்தார். சிவத்தொண்டிற்காக தன் மனைவியின் கரத்தை அறுத்தார். சிவபெருமானின் திருவடித் தொண்டினை பற்றிய கலிக்கம்பர் வேறு

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

எப்பற்றும் இல்லாதவர். ஒருநாள் அடியார்கள் சிலர் அமுது உண்ண கலிக்கம்ப நாயனார் இல்லத்திற்கு வந்தனர். அடியார்களின் திருவடியை நீரினால் சுத்தம் செய்து அமுது வழங்குவதும் முறையாகும். இந்நிலையில் வந்த அடியார்களின் பாதத்தை நாயனாரின் மனைவி நீரினால் சுத்தம் செய்யும்போது அடியார்களில் ஒருவர் தம்மிடம் முன்பு வேலை பார்த்தவர் என்று கூறி அவர் திருவடியை வணங்க மறுத்தார்.

**என்பும் அரவும் அணிந்த பிரான்**

**அடியார் ஆகி அங்கு எய்தும் (கலிக்கம்ப நாயனார் புராணம், பா. 6)**

இவ்வாறு அடியாராக வந்தவரை வணங்க மறுப்பது தவறு என்று உரைப்பினும் மனைவியார் அதனை ஏற்கவில்லை. ஆதலால் சிவத்தொண்டில் குறை ஏற்பட்டு விடக்கூடாது என தன் மனைவியின் கரத்தினை துண்டித்து விட்டு தானே நீரினால் அடியாரின் திருவடி வணங்கி திருத்தொண்டு புரிந்தார். இவ்வாறு பல ஆண்டுகள் சிவத்தொண்டு புரிந்து சிவனடி சேர்ந்தார். சிவனடியார் போல் வந்தவர் தன்னுடைய ஏவலை புரிந்தவன் என்றாலும் தற்போது திருநீறு,உருத்ராட்சம் அணிந்த சிவனடியார்களுள் ஒருவராக இருக்கிறார் என்பதை உணர்ந்தும் எப்பொழுதும் சிவத்தொண்டே முதன்மையானது என்று எண்ணியும் தன் மனைவி என்று பாராது கரத்தினை வெட்டி சிவத்தொண்டு புரிந்தவர் கலிக்கம்ப நாயனார்.

**பெரியபுராணத்தின் கால சூழல்**

பெரியபுராணத்தின் காலம் கிபி 12-ம் நூற்றாண்டாகும். சேக்கிழார் கிபி 3 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்கு உட்பட்ட செய்திகளைத் தகுந்த ஆதாரங்களோடு பதிவு செய்துள்ளார். புராணம் பாடும் போது சேக்கிழார் தம் காலத்து நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர். அக்காலத்துவரால் சொல்ல கேட்டவர். வரலாற்று அறிவு நிரம்பப் பெற்றவர். அமைச்சர் என்னும் முறையில் தமிழ்நாட்டுப் பகுதிகள் பலவற்றிற்கும் நேரில் செல்லும் வாய்ப்பினையும் தமக்கு முற்பட்ட காலத்து வரலாற்றுநிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெற்றிருந்தவர். அக்காலத்து, வரலாற்று மூலங்கள் என்று கருதப்பட்ட ஆவணங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆணை ஓலைகள் என்பனவெல்லாம் அமைச்சருடைய பார்வைக்கு உட்பட்டவையே. பேரரசின் தலைமை அமைச்சர் என்ற நிலையில் இந்த மூலங்கள் எல்லாம் சேக்கிழாருக்கு எளிதில் கிடைக்கத்தக்கனவாய் இருந்தன. திருத்தொண்டர்களின் பெரும்பாலோர் பக்தி இயக்க காலத்தவர்கள் அவர்களுடைய இயக்கமும் தொண்டும் சமயம் சார்ந்தனவாதலால் கோவில்களைச் சுற்றிய அவர்களது தொண்டு வாழ்க்கை அமைந்தது.கோவில்கள் எல்லாம் வரலாற்றுத் தலங்களாக விளங்கின. இத்தகைய கோவில்கள் எல்லாம் அரசின் மேற்பார்வையில் இருந்து வந்தன. எனவே அடியார்களது வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள விரும்பிய சேக்கிழாருக்கு அவை எளியவாயின. மேலும், திருத்தொண்டர்களைப் பற்றிய முன்னைய வரலாற்று மூலங்கள் ஆகிய திருமுறைகள் கோவில்களில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தனவாதலின் அவையும் சேக்கிழாருக்கு எளிமையில் வாய்த்தன. நாயன்மார்களில் பலர் வரலாற்றுச் சிறப்புடைய

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

அரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்களைப் பற்றிய வரலாற்று மூலங்களும் அமைச்சர் என்ற முறையில் சேக்கிழார் வரலாற்று பார்வைக்கு அடி உரம் ஆகின. இவ்வாறு கல்வெட்டுக்கள், திருமுறைகள், மரபு வழி செய்திகள் போன்ற வரலாற்றுச் சான்றுகளுடன் பெரிய புராணத்தை இழைத்துப் பாடியுள்ளார். ஆதலின் அக்கால வரலாற்றுப் பரப்பினை உள்ளவாறு அறிவதற்கு பெரியபுராணம் பெருந்துணையாக உள்ளது.

**பெரியபுராணத்தில் பெண்மை**

பெரியபுராணத்தில் மூன்று பேர் பெண் நாயன்மார்கள். மங்கையர்கரசியார் சைவ சமயத்தை சார்ந்தவராக இருந்த போதிலும் தம் கணவரின் நோய் தீர்க்க போராடியவர். அமைச்சர் மூலம் திருஞானசம்பந்தரை வரவழைத்து அவர் நோயை தீர்த்துள்ளார். எனவே நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படுகிறார். காரைக்கால் அம்மையார் சைவ சமயத்தை சார்ந்தவர். ஆனாலும் தம் கணவர் தெய்வ நலம் பொருந்திய பெண் என கருதி வேறொரு திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் பேய் வடிவம் கொண்டு சிவபெருமானை வழிபட்டுள்ளார். எனவே நாயன்மார்களில் ஒருவராக கருதப்படுகிறார். சுந்தரர் உடைய தாயார் நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படுகிறார். இவர்களைத் தவிர தமக்கையாக திலகவதியார் சைவ சமயத்தை சார்ந்து தன் தம்பியை நல்வழிப்படுத்தியுள்ளார். தம் தம்பியான திருநாவுக்கரசருக்கு உற்ற நேரத்தில் உறுதுணையாக இருந்து நோய் தீர்க்க உதவியுள்ளார். எனினும் அவர் நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படவில்லை. மகளாக மனைவியாக பல பெண்கள் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளனர். பக்தி நிலை கருதி தன் மகளின் மணநாள் அன்றே கூந்தலை அறிந்து கொடுத்தவர். தன் மனைவியை சிவனடியார் ஒருவர் கேட்க உடனே சரி அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுபவர். மனைவியின் காலை வெட்டுபவர் மூக்கை அறுப்பவர். இவர்கள் நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படுகிறார்கள். பக்தியின் உச்சநிலையில் தாங்கள் செய்யும் செயலை சரி என்று கருதுகிறார்கள்.இயற்கைக்கு மாறான செயலை செய்ய வைத்து இறைவன் காட்சி தந்ததாக பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடியுள்ளார். பெண்களின் மனநிலை குறிப்பிடப்படவில்லை. பெண்கள் நாயன்மார்களாக கருதப்படும் நிலையில் தன் கணவருக்கு ஏற்ற வகையில் நடந்து கொள்ளுதல், தன் கணவரை வேறு சமயத்தில்இருந்து மாற்றுதல்,.தன் கணவரின் நோயை தீர்க்க முயலுதல் போன்ற செயல்களாகவே குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

முன்னோர்கள் நமக்கு கொடுத்துள்ள அழியா சிறப்பு அவர்களின் இலக்கியங்களே. சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை அனைத்தும் நம் வாழ்வோடு ஒன்றியவை. நாம் சிறந்த வாழ்வை மேற்கொள்ள இலக்கியங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. ஏனெனில் நம் முன்னோர்களின் ஒவ்வொரு செயலும் நாம் இன்றைக்கும் நினைத்து நினைத்து வியப்படைவதாக அமைந்துள்ளது. அவரவர் வாழ்வில் நடக்கும் நன்மை, தீமையை கொண்டே

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

கடவுள் என்பவர் உருவாக்கப்படுகிறார். கடவுள் என்பவர் இவர்தான் என்று உறுதியாக கூற முடியாத நிலை நிலவுவதால் நம் நம்பிக்கை கடவுளாக திகழ்கிறது. நாயன்மார்களின் நம்பிக்கை நிறைந்தசெயல்களுக்குபெண்கள் துணையாக நின்றுள்ளனர்.கணவரின் செயலுக்கு உற்றத் துணையாக இருந்துள்ளனர். எத்துணைச் செயலாக இருப்பினும் அதை கருதாமல் கணவனுடைய பேச்சைக் கேட்கும் நிலையில் பெண்கள் இருந்துள்ளனர் என்பதனை அறியலாம். பிள்ளைக்கறி சமைத்தல், கூந்தலை அரிந்து கொடுத்தல், பூவை மோகந்ததற்காக மூக்கை அறுத்தல், பூவை எடுத்ததற்காக கையை வெட்டுதல்,மறுத்துப் பேசிய நிலையில் காலை வெட்டுதல். சிவனடியார் ஒருவருடன் தன் மனைவியை, கேட்டவுடன் செல்வதற்கு அனுமதித்தல் போன்ற செயல்கள் நாயன்மார்களின் செயல்களாக உள்ளது. பெண்களின் நிலை நாயன்மார்களுக்கு உற்றத் துணையாக இருப்பதாகவே பெரியபுராணம் காட்டுகிறது.

**துணைநூற் பட்டியல்**


[1] நடராஜன், பி.ரா. புலவர். *பெரியபுராணம் (மூலமும் உரையும்) தொகுதி 1 - 4*. உமா பதிப்பகம், சென்னை -1, முதற்பதிப்பு - டிசம்பர் - 2005.

[2] ஞானசம்பந்தன், அ.சா. *பெரியபுராணம் ஓர் ஆய்வு*. சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை-17, முதல் பதிப்பு – மார்ச் - 1994.

[3] அருணாச்சலம், பா. *பக்தி இலக்கியம்*. முல்லை நிலையம், சென்னை -17, முதற்பதிப்பு - 2002.

[4] அருணாச்சலம், பா. *சைவ சமயம் ஒரு அறிமுகம்*. முல்லை நிலையம், சென்னை - 17, முதற்பதிப்பு-2002.

[5] இராசமாணிக்கனார். *பெரியபுராணம் ஆராய்ச்சி*. பழனியப்பா பிரதர்ஸ் சென்னை - 14, முதற்பதிப்பு -1948.

[6] கைலாசபதி. *பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*. பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு -1966.


**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.